அசல்

1.10.36 மா. ஜம்புலிங்கம்

அசல் – 1

பதிலாயிற்று 13.10.36

உ
சிவமயம்.

M. JAMBULINGA GURUKAL, VIDWAN:
TAMIL PANDIT:
B. H. S: MUSIRI.

Dated 1 - 10 1936

ஸ்ரீ ஸ்ரீ தமிழ்த் தெய்வத்தின் திருவடிகட்கு ஜம்புலிங்கம் அநேக நமஸ்காரம்.

இவண் அடியேன் திருவருளுதவும் தவப் பேற்றால் நலனே. அவண் தங்கள் திருமேனி நலத்துக்குத் திருமுகம் விடுக்கப் பணிந்து வேண்டுகின்றேன்.

தங்கள் அருமைச் சகோதரர் அவர்களால் 'சதாசிவநேசக வரலாறு' அனுப்பப் பெற்ற பாக்கியம் பெற்றமைக்கு என் நல்வினையை நாவாரத் துதிக்கின்றேன்.

தமியேன் பன்னாட்களாக விண்ணப்பம் அனுப்பாமைக்குப் பெரிதும் பொறுத்தருள வேண்டுகின்றேன்.

பிழைபல பொறுக்கும் பேரறிவாளா! அடியேனது சிற்றறிவிற் றோன்றிய வேண்டுகோளைக் கீழே குறிக்கின்றேன். பொறுத்தின்னருள் செய்ய வேண்டுகின்றேன்.

உம்பருயர் தருவளருந் தமதான புரநகரிலுதித்த மேலோன்
அம்புவியில் முதற்குலத்தோ னரும்புலவர் விரும்புதமிழ்ச் சாமிநாதன்
உம்பரும் தங்கைக்க வந்தாற்றும் தமிழ்ப்பணியை யுரைக்கக் கேட்ட
கும்பமுனி சிரம்பணிந்து தவம்புரிய பொதியவரை குதுகிக்குமே. (1)

குருமணியே! குலமணியே! குணமணியே! எனச்சில்லோர் துதிப்பர். நின்னைத்
தருநிதியே! தமிழ்நிதியே! தயாநிதியே! எனச்சில்லோர் சாற்றுவார்கள்.
தெருட்கடலே! அருட்கடலே! சிவபத்தி வளர்கடலே! என்பார் சில்லோர்.
இருள்கடியு மறிவினனே! என்னென்றுன் சீரினியே னியம்ப வல்லேன். (2)

நாகலத்திற் புலவர்குழா நனிவியந்தே யெடுத்தியம்பு நல்லோனை
பாகலத்தின் மாசிபெரு மீனாட்சி சுந்தரனும் பாவல்லோனின்

அசல்

1.10.36 மா. ஜம்புலிங்கம்

அசல் – 1

M. JAMBULINGA GURUKAL, VIDWAN:
TAMIL PANDIT:
B. H. S: MUSIRI.

Dated ______________

தேனலத்தின் வரலாற்றைச் செகத்துளோர் தெரிந்துவக்கத்
தெளித்த மேலோய்!
நீநலமா நின்சரித முழுமையுமே எழுதிடவே வேண்டி நிற்-
பேன். (3)

நீயுடைச் சரித மெல்லா நேர்ந்தமிழ்ச் சரித மாகும்.
மீயுயர் விசும்பி னோரும் விரும்புநல் லமிர்த மாகும்.
ஆய்வுரை செய்யும் வன்மை அடக்கம்ஆள் வினைநன் வாய்மை
தோய்ந்திடு வரலா றென்றும் துரிசறு மனுநூ லாகும். (4)

நீயுரைத் திடவே யிந்த நெடுநிலந் தன்னில் யார்தாம்
பாயுளம் புலனிற் பாயா தோரிடம் பயிலச் செய்யும்
ஓய்விலா துழைக்கு நின்றன் ஒப்புயர் வற்ற வாழ்க்கைத்
தூய்மையிற் சரிதந் தன்னைத் தொடங்கியே முடிக்க வல்லார். (5)

ஆதலி னடியே னென்பால் வேண்டுவின் னைப்பம் தேட்டே
ஈதலிற் சீர்த்தி பெற்ற ஏந்தல்வள்ள லும்பின் போகக்
காதலி னிலைத்த காட்சி வண்ணமயக் கவினச் செய்த
வேதநா லோதுஞ் சாமி நாதனே! விளம்ப வேண்டும். (6)

சுநாயக கம்மாம கோபாத்தி யாய
சயிலம்உவே. சாமிநா தையர் — கவியணிந்தோன்
அல்லாண்ட கண்டத்தெம் மையன் குருநாயகன்
பல்லாண்டு வாழ்கவிப் பார். (7)

பிழைபொறுக்க. தங்களுமைத் தம்பியாரவர்களுக்கு எனது
வணக்கத்தையும் உவகையையும் உரித்தாக்கப் பன்முறை
பணிந்து வேண்டுகின்றேன். வணக்கம். வணக்கம்.

இங்ஙனம்
தங்கள் திருவடித் தொண்டன்
மா. ஜம்புலிங்கம்.

அசல்

1.10.36 மா. ஜம்புலிங்கம்

அசல் – 1

P. 396–399. த.க. Vol 1 இல் Copied.